**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.**

| | |
|---|---|
| Sessions Case | - S.C **No.581/2018** |
| Deposition of witness for | - P.W. 6 |
| Name | - Tmt.Chandra |
| Father's Name/ Husband's Name | - |
| Village | - |
| Taluk | - |
| Caste | - |
| Calling | - |
| Religion | - |
| Age | - |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **11.08.2023**

**1,2 எதிரிகள் ஆஜர். 3 முதல் 6 எதிரிகள் ஆஜர் இல்லை பிரிவு 317 குவிமுச மனு தாக்கல்**

நான் தற்போது தேனியில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். ஆஜராகாத எதிரிகளையும் தெரியும். நான் எனது அக்கா அசா.1. என் அக்கா மகள் சிவப்பிரியா. சிவப்பிரியாவை 07.09.2016ம் தேதி 1வது எதிரிக்கு நாகமலைப்புதுக்கோட்டையில் வைத்து திருமணம் செய்து கொடுத்தார். இரண்டு மாதம் சிவப்பிரியாவும் 1வது எதிரியும் நன்றாக இருந்தார்கள். என் அக்காவின் கணவர் இறந்துவிட்டார். அவர் இறந்து 6 மாதத்தில் தான் விருமாண்டியின் அம்மா அப்பா ஆகியோர் என் அக்காவிடம் பொண்ணு கேட்டு வந்தார்கள். என் அக்காவிற்கு பசும்பொன் நாத்தனார் ஆவார். அவர் மகன் தான் விருமாண்டி. திருமணம் எல்லோரும் சேர்ந்து தான் திருமணம் செய்து வைத்தோம். 3வது மாதத்தில் இருந்து நகை கேட்டு டார்ச்சர் செய்துள்ளார்கள். மருமகன் விருமாண்டி தான் டார்ச்சர் செய்துள்ளார். என் அக்கா மகள் கல்யாணம் ஆகி

கீழக்குயில்குடியில் மாமியார், மாமனார் ஆகியோருடன் குடியிருந்து வந்தார். சிவப்பிரியாவின் மாமனார் பெயர் எனக்கு ஞாபகமில்லை. விருமாண்டி அவரது தாயார் பசும்பொன்னும் நகையை கேட்டு சிவப்பிரியாவை டார்ச்சர் செய்தார்கள் என எங்களுக்கு போன் போட்டு சொன்னார்கள். இந்த மாதிரி உன் மருமகன் நகையை கேட்கிறார் என சிவப்பிரியா சொன்னார். சிவப்பிரியா கோபித்துக்கொண்டு அம்மா பாக்கியலெட்சுமி வீட்டிற்கு வந்துவிட்டார். வந்து தான் நகையை கேட்கிறார் என்று என்னிடம் சொன்னார். திருப்பி வந்து நகையை பற்றி நாங்கள் பேச மாட்டோம் என்று சொல்லி பெண்ணை 1வது எதிரி மற்றும் அவரது பெற்றோர்கள் வந்து பெண்ணை கூட்டிச்சென்றார்கள். சாவதற்கு 10 நாளைக்கு முன்னர் மறுபடியும் நகை கேட்டு துன்புறத்தியுள்ளதால் சிவப்பிரியா கோபித்துக்கொண்டு அவரது அம்மா பாக்கியலெட்சுமி வீட்டிற்கு வந்தார். திரும்ப 3 நாட்கள் கழித்து 1வது எதிரி என் அக்கா வீட்டிற்கு வந்து என் அக்கா மகளை அழைத்துச்சென்றார். நாங்கள் அனைவரும் பேசித்தான் அனுப்பி வைத்தோம். அந்த சமயத்தில் சிவப்பிரியா 3 மாத கர்ப்பமாக இருந்தார். இரண்டு மூன்று நாட்களில் என் அக்கா பாக்கியலட்சுமி சிவப்பிரியாவிற்கு உடம்பு சரியில்லை என்று பாக்கியலெட்சுமியின் கொழுந்தன் சமுத்திரபாண்டி சொன்னதாக என் அக்கா என்னிடம் சொன்னார். அதன் பேரில் நானும் என் வீட்டுக்காரரும் சிவப்பிரியாவை பார்க்க அவர் வீட்டிற்கு சென்றோம். போய் பார்த்தபோது என் அக்கா மடியில் என் அக்கா மகள் சிவப்பிரியாவை படுக்க வைத்திருந்து அழுதுகொண்டு இருந்தார். என்ன ஆச்சு பாக்கியம் என்று கேட்டேன். கேட்டதற்கு என்னவென்று தெரியலடி தூக்கு போட்டு விட்டதாக சொல்கிறார்கள் என்று சொன்னார். சிவப்பிரியாவின் நைட்டி கிழிந்திருந்தது. எங்களுக்கு பதட்டமாகிவிட்டது. பிள்ளையை ஏதொ செய்துவிட்டார்கள் என்று 100 க்கு என் அண்ணன் மகள் மதுபாலா போன் பண்ணியது. சிவப்பிரியாவை 4

நபர்கள் தூக்கிச்சென்றார்கள் அதில் என் அக்காவின் மச்சானும் அதில் இருந்தார். அப்பறம் எல்லோரும் சேர்ந்து எங்கு கொண்டு போகிறீர்கள் என்று கேட்டதற்கு ஆஸ்பத்திரிக்கு கூட்டிப்போவதாக சொன்னார்கள். என்னையும் என் அக்காவையும் தள்ளிவிட்டதில் என் அக்கா மயக்க மாகிவிட்டார். நாங்கள் என் அக்காவை நாகமலைப்புதுக்கோட்டையில் உள்ள மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம். நாங்கள் கிளம்பவும் என் அக்கா மகளை தூக்கிச்சென்ற 4 நபர்கள் சுடுகாட்டில் கொண்டு போய் எரித்துவிட்டார்கள். என்ன ஏது என்று விசாரித்தபோது நாங்கள் ஒன்றும் செய்யவில்லை அந்த பிள்ளையாக தான் தூக்கு போட்டுக்கொண்டது என்று சொன்னார்கள். என் அக்காவின் மச்சானிடம் இப்படி உனக்கு ஒரு பிள்ளை இருந்தால் இப்படி செய்வீர்களா என்று கேட்டதற்கு நீ ஏன் கேட்கிறாய் நீ எங்கு போய் சொல்லுவியோ சொல் நாங்கள் பார்த்துக்கொள்கிறோம் என்று சொல்லிவிட்டார். என் அக்காவின் மச்சான் பெயர் எனக்கு ஞாபகமில்லை. என்னை போலிசார் விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

எனது சொந்தஊர் தேனி தான். திருமணம் ஆனது தேனிதான். சாட்சி தற்போது தான் பிறந்தஊர் மதுரை என்று சொல்கிறார். கல்யாணம் ஆன பின்பு முறுக்கு வியாபாரம் செய்வதற்காக சேலத்திற்கு சென்றுவிட்டேன் என்றால் சரிதான். எனக்கு 3 குழந்தைகள் உள்ளனர். அவர்கள் மூவரும் சேலத்தில் தான் பிறந்தார்கள். ரேசன் கார்டு, என் குழந்தைகள் படித்தது அனைத்தும் சேலத்தில் தான் என்றால் சரிதான். என்ன தேதியில் எனக்கு யார் போன் செய்தார்கள் என்ற விபரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். நான் எதிரியின் வீட்டிற்கு போகும் முன் அங்கு சுமார் 50 பேர் இருந்தார்கள். எதிரிகள் நகை கேட்டார்கள் என்ற விபரம் என் அக்கா சொல்லிதான் தெரியும். எங்கள் கள்ள வீட்டு சமுதாயத்தில் கூடுதலாக நகை கேட்பதும் ஏற்கனவே

போட்ட நகையை கொடு அடகு வைத்து தொழில் செய்யலாம் என்று கேட்பது சகஜம் தான் என்றால் சரிதான். என் அக்கா விடம் போட்டுவிட்ட நகையை கொடு வட்டித்தொழில் செய்யலாம் என்று கேட்டார்கள் என்றால் சரிதான். அப்படித்தான் என் அக்காவும் சொன்னார் என்றால் சரிதான். நாங்கள் வளைகாப்பிற்கு பின் அடகு வைத்து தொழில் செய்யுங்கள் என்று சொன்னோம். என் அக்காவற்கு அன்னலெட்சுமி, சிவப்பிரியா என்ற மகள்களும் அருண்பாண்டி என்ற மகனும் இருந்தார் என்றால் சரிதான். அருண்பாண்டியும் அன்னலெட்சுமியும் சிவப்பிரியாவின் திருமணத்திற்கு முன்னர் பலதடவைகள் தற்கொலை செய்வதற்காக மருந்தை குடித்து சிகிச்சை அளித்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் பலதடவை குடிக்கவில்லை. அவரது அப்பா தவறிய 25 நாட்கள் கழித்து தகப்பனாரின் இறப்பை தாங்க முடியாமல் மருந்து குடித்துவிட்டனர். எந்த ஆஸ்பத்திரியில் வைத்து சிகிச்சை அளிக்கப்பட்டது என்ற விபரம் மட்டும் தெரியும். எந்தெந்த தேதியில் மருந்தை குடித்து சிகிச்சை அளிக்கப்பட்டது என்று எனக்கு ஞாபகமில்லை. அதேபோல் இரண்டு பிள்ளைகளுக்கும் வேறு வேற மருத்துவமனையில் வைத்துதான் சிகிச்சை அளிக்கப்பட்டது. அன்னலெட்சுமி மருந்து குடித்ததும் அருண்பாண்டி மருந்து குடித்ததும் வேறு வேறு நாட்கள் என்றால் சரிதான். சிவப்பிரியா கர்ப்பமாக இருந்தது அவ்வாறு கர்ப்பமாக இருக்கும் பட்சத்தில் மாதவிடாய் நின்ற தேதியிலிருந்து எந்த தேதியில் நின்றது எப்போது குழந்தை பிறக்கும் என்ற தேதி நிர்ணயம் செய்து மருத்துவ குறிப்பு எழுதுவார்கள் என்றால் சரிதான். சிவப்பிரியாவை எந்த ஆஸ்பத்திரியில் எந்த மருத்துவர் பரிசோதனை செய்து குறிப்பு எழுதினார் என்ற விபரம் எனக்கு தெரியாது. என் அக்கா மயக்கம் போட்டபோது நாகமலைப்புதுக்கோட்டையில் எந்த மருத்துவமனையில் எந்த மருத்துவரிடம் காண்பித்தோம் என்ற விபரத்தை போலிசார் விசாரணையில் சொன்னேன். நான்

போகும் போது என் அக்கா சிவப்பிரியாவை மடியில் சுமார் 20நிமிடங்கள் படுக்க வைத்திருந்தார். அன்று முழுவதும் போலிசார் வரவில்லை. நான் சென்ற கொஞ்சநேரத்தில் ஆர்டிஓ அம்மா வந்துவிட்டார். ஆர்டிஓ அம்மா அங்கு அரைமணி நேரம் இருந்தார். அப்போது சிவப்பிரியாவின் உடல் வீட்டில் இல்லை. நான் ஆர்டிஓ விடம் இன்னார் தான் சிவப்பிரியாவை தூக்கிச்சென்றார்கள் என்ற விபரத்தை சொன்னேன். அந்த வீட்டில் என் சொந்தக்காரர்கள் 10,15பேர் இருந்தோம். அதில் பெண்கள் மட்டும் தான் இருந்தோம். ஆண்கள் இலலை. ஆர்டிஓ வரப்போகிற விபரம் எங்களுக்கு தெரியும் என் சித்தப்பா சுப்பு தான் சொன்னார். அவர் ஆர்டிஓவை கூட்டிவந்த பின்பு தான் அவர் கூட்டிவருவது எங்களுக்கு தெரியும். அவருக்கு எப்படி தகவல் தெரியும் என்றால் நான் என் அண்ணன் மாரநாடுக்கு தகவல் சொல்லி அவர் என் சித்தப்பா சுப்புவிற்கு தகவல் சொன்னார். சம்பவ இடத்திற்கு மாரநாடு வரவில்லை. ஏனென்றால் அவர் சேலத்தில் இருந்தார். யாரோ 4 நபர்கள் சிவப்பிரியாவை தூக்கிச்சென்றபோது போலிசார் வரவேண்டும் என்று நாங்கள் தடுத்தோம். போலிஸ் விசாரிக்கும் போதோ ஆர்டிஓ விசாரிக்கும்போது நாங்கள் தடுத்தும் பாடியை தூக்கிச்சென்று விட்டார்கள் என்று சொன்னோம். போலிசார் விசாரணையிலும், ஆர்டிஓ அம்மாவிடமும் என் அக்காவை தள்ளிவிட்டு சென்றுவிட்டார்கள் அதனால் என் அக்கா மயக்கமாகிவிட்டதாக சொன்னோம். போலிசார் விசாரணையிலும், ஆர்டிஓ அம்மாவிடமும் என் அக்காவின் மச்சானிடம் இப்படி உனக்கு ஒரு பிள்ளை இருந்தால் இப்படி செய்வீர்களா என்று கேட்டதற்கு நீ ஏன் கேட்கிறாய் நீ எங்கு போய் சொல்லுவியோ சொல் நாங்கள் பார்த்துக்கொள்கிறோம் என்று சொல்லிவிட்டார் என்று சொல்லியுள்ளேன். இறந்த சிவப்பிரியாவை தூக்கிச்சென்ற பின் அரை மணி நேரம் கழித்து தான் ஆர்டிஓ அம்மா வந்தார். அவருடன் போலிசாரும் வந்தார்கள். அங்கு வந்தவர்கள் என்னிடம் என்ன

விசயம் என்றும் இறந்துபோன சிவப்பிரியாவை எங்கு தூக்கிச்சென்றார்கள் என்ற விபரத்தையும் கேட்டார்கள் அவர்களிம் நாங்கள் மருத்துவமனைக்கு சென்றவுடன் சுடுகாட்டிற்கு தூக்கிச்சென்றார்கள் என்ற விபரத்தை சொன்னேன். ஆர்டிஓவும் போலிசாரும் பிரேதத்தை எரித்துவிட்டார்களா என்று பார்ப்பதற்கு சுடுகாட்டிற்கு போனார்கள். என் கணவர் இறந்தபின் மீண்டும் நான் தேனியில் செட்டில் ஆகிவிட்டேன். நான் சொன்னமாதிரி ஆர்டிஓ விசாரணையில் சிவப்பிரியாவை 1, 2 எதிரிகள் கொடுமைப்படுத்தியதாக தெரியவரவில்லை என்றால் சரியல்ல. என் அக்கா குழந்தைகள் எல்லோருக்குமே சின்ன கோபம் வந்தால் கூட தற்கொலை முயற்சி செய்வது வாடிக்கை என்றால சரியல்ல. சிவப்பிரியா இறந்த பின்னர் 5வருடத்திற்கு பின் அன்னலெட்சுமிக்கு திருமணம் நடந்தது. என் அக்கா பிள்ளைகள் மருந்து குடித்து மருத்துவம் பார்த்தவிபரம் எனக்கு தெரிந்தது போல் உறவினர்களுக்கும் தெரியும் என்றால் சரிதான். என் அக்கா பிள்ளைகள் தற்கொலை முயற்சியில் அடிக்கடி செய்வதால் அதே போல் சிவப்பிரியாவும் தற்கொலை செய்து கொண்டு இறந்துவிட்டதால் அன்னலெட்சுமிக்கு திருமணம் ஆகாமல் போய்விடும் என்று பயந்து என் அக்கா மற்றும் என் குடும்பத்தினர் மட்டும் முடிவு செய்து உடனடியாக பிரேதத்தை எரித்துவிட்டோம் என்றால் சரியல்ல. சிவப்பிரியா இறந்தவுடனே பாக்கியலெட்சுமிக்கு தகவல் சொன்னதுபோல் எனக்கும் மற்ற உறவினர்களுக்கும் தகவல் சொல்லிவிட்டு காவல் துறைக்கு தகவல் சொன்னார் என்றால் சரியல்ல. அதனால் தான் ஆர்டிஓ விசாரிக்கும்போது எரித்தது நாங்கள் என்று தெரிந்து பிரச்சனை ஆகிவிடும் என்பதால் தான் அன்றைய தினம் சாயந்திரம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல. நாங்கள் இல்லாத போது எரித்துவிட்டார்கள் என்று சொல்லவேண்டும் என்பதற்காகத் தான் என் அக்கா மயக்கம் அடைந்து மருத்துவமனை

சென்றுவிட்டோம் என்று சொல்லியுள்ளோம் என்றால் சரியல்ல. நான் போலிசார் விசாரணையில் நேரில் பார்த்ததாகவோ சம்பவம் எனக்கு நேரடியாக தெரியும் என்று சொல்லவில்லை என்றும் நான் கேள்விப்பட்டேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. சிவப்பிரியாவின் நைட்டி கிழிந்துள்ளது என்ற விபரத்தையும் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் சிவப்பிரியா கர்ப்பமாக இல்லை என்றும் வளைகாப்பிற்கு பின் தொழில் செய்வதற்கு நகையை கேட்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. சிவப்பிரியாவும் விருமாண்டியும் சந்தோசமாகத்தான் இருந்தார்கள் என்றும் இரண்டு நாளுக்கு முன்னர் ' வீட்டிற்கு வந்தபோது நடந்த விசயத்தை சொல்ல மறுக்கிறோம் என்றும் அந்த விசயம் கூட தற்கொலைக்கு காரணமாக இருக்கும் என்றால் சரியல்ல. சிவப்பிரியா தற்கொலை செய்துகொண்டதால் இவர்கள் வீட்டு பிள்ளைகளுக்கு இதுவே வழக்கம் என்று தெரிந்து விடும் என்று அதை மறைத்து எதிரிகள் மீது பழி சுமத்துகிறோம் என்றால் சரியல்ல. இறந்த சிவப்பிரியாவை அடக்கம் செய்ததற்கும் எதிரிகளுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு ”சரி” என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம், மதுரை.